Egg Powder Factory.

* 20. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to establish a factory in Namakkal Taluk for preparing egg powder; and

(*b*) if so, the date on which it will be established ?

கோழிமுட்டை மாவு தொழிற்சாலை

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல் தாலுக்காவில் கோழி முட்டையிலிருந்து மாவு (பவுடர்) தயார் செய்யும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) நாமக்கல் தாலுக்காவில் கோழி முட்டையிலிருந்து மாவு தயார் செய்யும் திட்டம் ஏதுமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இதுபோன்ற தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன ? எங்கெங்கே உள்ளன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இதுபோன்ற தொழிற்சாலை ஏதுமில்லை என்றுதான் நான் பதில் அளித்தேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இதுபோன்ற தொழிற்சாலை மதுரையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கேள்வி நாமக்கல் தாலுக்காவில் இத்தகைய தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியதாக இருப்பதால், கோழி உற்பத்தி அங்கே மட்டும் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் எந்த எந்தப் பகுதிகளில் கோழி உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று கணக்கெடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நாமக்கல் பகுதியில் ஏறக்குறைய 400 விவசாயிகள் கோழிப்பண்ணை வைத்திருக்கிறார்கள். இவைகள் 1,75,000 முட்டைகள் நாள்தோறும்

தருகின்றன. மற்றும் கோவை, திருச்சி, மதுரை மாவட்டங்களுக்கும் சேலம் மாவட்டத்திலிருந்துதான் முட்டை அனுப்பப்படுகிறது என்பதைப் பார்க்கும் போது, தமிழ் நாட்டில் கோழி முட்டை உற்பத்தி செய்வதில் நாமக்கல் முன்னணியில் இருக்கிறது.

(முற்பகல் 11-30)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கோழி முட்டை மாவு எந்த எந்த வகைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கோழி முட்டையிலிருந்து மாவு தயாரிக்கும் திட்டமே அரசிடம் இல்லை. எனவே அதைப்பற்றிய கேள்விக்கே இடமில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசால் தொழிற்சாலைகள் நடத்தப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அது போன்ற தொழிற்சாலைகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்பட்டு வருகிற தனியார் தொழிற்சாலைகளுக்கு அரசு உதவி புரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதுபற்றி இதுவரையில் தகவல் எதுவும் இல்லை. அப்படி இருந்தால், அரசு உதவி செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள் ஆகிய உங்களுக்கு எல்லா நேரத்தையும் ஏக போகமாக விட்டுவிடவேண்டி யிருக்கிறது. ஒவ்வொருவராகக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். கேள்வி நேரம் கடந்துவிட்ட பிறகும் தொடர்ந்துகொண்டிருந்தால் எப்படி முடியும் ?

திரு. செ. முத்துசாமி : ஒரு சிறு வேண்டுகோள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் வேண்டுகோளுக்கு இடம் கிடையாது.

திரு. செ. முத்துசாமி : கேள்வி கேட்கத்தான் வேண்டுகோள் விடுக்கிறேன்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நாமக்கல் பகுதியைச் சார்ந்தவன். கோழிப்பண்ணை வைத்து அந்தப் பணியிலே ஈடுபட்டு இருப்பவன். நாமக்கல் பகுதியிலேதான் தமிழ் நாட்டிலேயே அதிகமான அளவுக்குக் கோழி வளர்ப்பு, கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு

வருகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தத் தொழில் அங்கு பெரிய இண்டஸ்ட்ரி போல வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே அங்கே இது சம்பந்தமாக இருந்த 5, 6 அதிகாரிகளை, கால்நடை அதிகாரிகளை தென் ஆற்காடு பகுதிக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகளைத் திரும்பவும் அங்கு மாற்ற ஏற்பாடு செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதைப்பற்றித் தகவல்களைச் சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : கோழி முட்டையிலிருந்து மாவு செய்கின்ற தொழிற்சாலையைப் பொறுத்த பதில்களையும் கேள்விகளையும் கேட்டுக் கொண்டார்கள். இது தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கேள்வியாகவும் இருக்கிறது. இந்த நிலையிலே சிறு தொழில்கள் பற்றிய அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்றார்கள். தலைவர் அவர்கள் அந்த அமைச்சர் அவர்களுக்கு அனுமதி தந்தால், அவர்கள் அதைப்பற்றிச் சொல்ல முடியும். சிறுதொழில்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதற்கான பதில்களைத் தர வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாவிற்குரிய அமைச்சர் அவர்களே பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பதில் நானே சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : துணைக் கேள்விகள் சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களிடம்தான் கேட்கப்படுகின்றன. அவர்களிடம் கேட்பதுதான் சரியாகும். சிறு தொழில்கள்பற்றி எந்தெந்த மாவட்டங்ளில் எந்த வகையான தொழில்கள் இருக்கின்றன, அரசுத் துறையில் எத்தனை, தனியார் துறையில் எத்தனை என்பது போன்ற விவரங்களுக்கு, தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட காரணங்களினால் தமிழ்நாடு கோழியின வளர்ப்பு நிறுவனத்திடம் முட்டை பவுடர் நிலையம் அமைக்கும் திட்டமேதும் இல்லை :—

(அ) உபரியாக முட்டைகளில்லாத காரணத்தினால் முட்டைப் பொடி செய்வதற்குத் தேவையான முட்டைகள் கிடைக்க வாய்ப்பில்லை.

(ஆ) புது முட்டையின் விலையைக் காட்டிலும் முட்டைப் பொடியின் விலை மிகவும் அதிகம்.

(இ) தற்சமயம் முட்டைப்பொடி இராணுவத்தினரால் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) விற்பனைக் கூடங்களில் முட்டைப்பொடிக்கு வரவேற்பில்லை.

மேலும் பம்பாயில் ஒரு முட்டைப் பொடி தயாரிப்பு நிலையம் உள்ளது. அந்நிலையத்தில் தயாரிக்கப்படும் பொடி இராணுவப் பகுதிகளுக்கு அனுப்பப் படுகிறது. எனினும் இந்நிலையம் முட்டை தயாரிப்பில் முழு இலக்கை அடைய முடியவில்லை. கேரள மாநிலத்தில் பல முயற்சி எடுத்தும் முட்டைப் பொடி தயாரிக்கும் திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நூறு கிராம் முட்டை பவுடர் ரூ. 12 விலையாகிறது. ஐம்பது கிராம் முட்டையில் 6 கிராம் முட்டைப்பொடி தயாரிக்க முடியும். அதன் விலை 72 காசுகள். ஆனால் 60 கிராம் எடையுள்ள ஒரு முட்டையின் விலை 40 காசுகள் தான். ஆண்டு முழுவதும் முட்டைகளின் சராசரி சில்லரை விலை 0.33 காசுகள்தான். முட்டைப்பொடி தயார் செய்து விற்பனைக்கு அனுப்ப வேண்டுமாயின், தனி முட்டையின் விலை 25 காசுகளுக்குக் குறைவாக கொள் முதல் செய்யப்படவேண்டியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு நஷ்டத்தை உண்டாக்கும். குறிப்பாக, முட்டைப் பொடிக்கு, தற்பொழுது கிராக்கியில்லை. எனவே இம்மாநிலத்தில் முட்டைப் பொடி நிலையம் அமைப்பது சாத்தியமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருமதி சத்தியவாணிமுத்து, மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ததாலும், திரு. சி. வி. இராஜகோபால் அவர்கள் மறைவெய்தியதாலும், சென்னை பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு ஏற்பட்ட இரண்டு காலியிடங்களை நிரப்ப வேண்டி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதி நிதித்துவக் கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது என்று நான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS